# முசிறி நகராட்சி

# நிர்வாக அறிக்கை

# 2023 – 2024

# முசிறி நகராட்சி

## 2023–2024 ஆம் ஆண்டு நிர்வாக அறிக்கை

1) நகராட்சியின் பெயர் : முசிறி

2) நிலை : இரண்டாம் நிலை நகராட்சி
( அரசாணை (நிலை) எண்.117, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள். 07.12.2021–ன்படி இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது )

3) பரப்பு : 18.80 சதுர கி.மீ

4) மக்கள் தொகை : 33323
ஆண்கள் – 16392
பெண்கள் – 16931

4I)அட்டவணை வகுப்பினர் : 4576
ஆண்கள் – 2240
பெண்கள் – 2336
(2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி )

- **எல்லை**:-

முசிறி நகராட்சி வடக்கே முசிறி – துறையூர் சாலையில் 2.0 கி.மீ என்ற இடத்திலிருந்தும், கிழக்கே முசிறி – திருச்சி நெடுஞ்சாலையில் 2.0 கி.மீ என்ற இடத்திலிருந்தும், தெற்கே காவேரி ஆற்றங்கரை 1.50 கி.மீ என்ற இடத்திலிருந்தும், மேற்கே முசிறி – சேலம் நெடுஞ்சாலையில் 3.0 கி.மீ இடத்திலிருந்தும், வடமேற்கில் முசிறி – தா.பேட்டை சாலையில் 3 கி.மீ இடத்திலிருந்தும் முசிறி நகராட்சி எல்லை ஆரம்பமாகிறது.

5) **விரிவு படுத்தும் திட்டம்**

நகரில் உள்ள பழுதடைந்துள்ள சாலைகளை நகர்புற சாலை மேம்படுத்தும் திட்டம், மாநில நிதிக்குழு திட்டங்களின் கீழ் மேம்படுத்தப்பட்டது. குடிநீர் பைப்லைன் இல்லாத பகுதிகளுக்கு குடிநீர் பகிர்மான குழாய் விஸ்தரிப்பு செய்யப்பட்டது. மேலும்,நகர் சுற்றுப்புறங்களை அபிவிருத்தி செய்யும் திட்டங்கள் நடப்பு ஆண்டில் நடவடிக்கையில் இருந்தது.

6) **பணியாளர் அமைப்பு**

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சியில் 01.04.2023 முதல் 30.03.2024 மு.ப வரை திருமதி.ப.கிருஷ்ணவேணி அவர்கள் ஆணையராக பணிபுரிந்துள்ளார். மேலும், அறிக்கையாண்டில் 01.04.2023 முதல் 30.03.2024 வரை திரு. சம்பத் குமார் பொறியாளராக பணிபுரிந்துள்ளார்.

7) **<u>நகர் மன்றம்</u>**

அரசாணை (நிலை) எண்.117, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.07.12.2021 –ன்படி முசிறி தேர்வுநிலை பேரூராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண். 127 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( தேர்தல் ) துறை, நாள்.16.12.2021 ல் முசிறி நகராட்சிக்கு 24 வார்டுகள் கொண்ட நகர்மன்றமாக நிர்ணயம் செய்து, இந்நகர்மன்ற அவசர கூட்ட தீர்மான எண்.3, நாள். 17.12.2021 ல் அனுமதிக்கப்பட்டு அரசாணை எண்.6, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.10.01.2022ல் வார்டு உள் ஒதுக்கீடு செய்து உத்திரவிடப்பட்டு, தமிழ்நாடு அரசிதழ் எண்.30, நாள்.10.01.2022ல் பின்வரும் விவரப்படி வெளியிடப்பட்டுள்ளது.

| மொத்த வார்டுகளின் எண்ணிக்கை | ஆதி திராவிடர் (பொ) ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டுகள் | ஆதி திராவிடர் (பெண்கள்) ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டுகள் | பெண்கள் (பொது) ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டுகள் | பொதுபிரிவினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டுகள் |
|---|---|---|---|---|
| 24 | 6, 4 | 17, 24 | 1, 2, 3, 9, 10, 14, 15, 16, 19, 21 | 5, 7, 8, 11, 12, 13, 18, 20, 22, 23 |

முசிறி நகராட்சியில் 22.02.2022–ம் தேதி நகர்மன்ற தேர்தல் நடத்தப்பட்டு கீழ்காணும் விவரப்படி நகர்மன்ற உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அதில் 04.03.2022 அன்று தலைவர் மற்றும் துணைத் தலைவருக்கான தேர்தல் நடைபெற்று கீழ்காணும் அட்டவணையில் உள்ளவாறு தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

| வ. எண் | பெயர் | பதவி |
|---|---|---|
| 1 | திருமதி. சி.கலைச்செல்வி சிவக்குமார் | தலைவர் |
| 2 | திரு. செ. சுரேஷ் | துணைத் தலைவர் |
| 3 | திருமதி. த. சுமதி | 1 வது வார்டு உறுப்பினர் |
| 4 | திருமதி. சி. மீனா | 2 வது வார்டு உறுப்பினர் |
| 5 | திருமதி. மு. மரகதம் | 3 வது வார்டு உறுப்பினர் |
| 6 | திரு.து. வசந்த குமார் | 4 வது வார்டு உறுப்பினர் |
| 7 | திரு.பெ. பாலகுமார் | 5 வது வார்டு உறுப்பினர் |
| 8 | திரு. பொ. இளையராஜா | 6 வது வார்டு உறுப்பினர் |
| 9 | திரு. த. முகேஷ் | 7 வது வார்டு உறுப்பினர் |
| 10 | திருமதி. ரா. லட்சுமி | 9 வது வார்டு உறுப்பினர் |

| வ. எண் | பெயர் | பதவி |
|---|---|---|
| 11 | திருமதி. கா. சரண்யா தேவி | 10 வது வார்டு உறுப்பினர் |
| 12 | திரு. சி. சரவணன் | 11 வது வார்டு உறுப்பினர் |
| 13 | திரு. ச. சரவணன் | 12 வது வார்டு உறுப்பினர் |
| 14 | திருமதி. சே. இந்திரா | 13 வது வார்டு உறுப்பினர் |
| 15 | திருமதி. ரா. கவிதா | 14 வது வார்டு உறுப்பினர் |
| 16 | திருமதி. இ. சசிகலா | 15 வது வார்டு உறுப்பினர் |
| 17 | திருமதி. ரா. சரண்யா | 16 வது வார்டு உறுப்பினர் |
| 18 | திருமதி, சு. மரகதம் | 17 வது வார்டு உறுப்பினர் |
| 19 | திரு,பி. நவீன்ராஜ்குமார் | 18 வது வார்டு உறுப்பினர் |
| 20 | திரு. ரா. தனசேகரன் | 20 வது வார்டு உறுப்பினர் |
| 21 | திருமதி. செ. கவிதா | 21 வது வார்டு உறுப்பினர் |
| 22 | திரு. மு. விஸ்வநாதன் | 22 வது வார்டு உறுப்பினர் |
| 23 | திரு.ல. சுந்தரராஜ் | 23 வது வார்டு உறுப்பினர் |
| 24 | திருமதி. மு. புதிமிளா | 24 வது வார்டு உறுப்பினர் |

மேற்படி நகர்மன்றம் 28.03.2022 முதல் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

முசிறி நகராட்சியில் 31.03.2022ல் முசிறி நகராட்சி வரி மேல்முறையீட்டு குழு உறுப்பினர்கள், நியமன குழு உறுப்பினர் மற்றும் ஒப்பந்தக்குழு உறுப்பினருக்கான மறைமுறை தேர்தல் நடத்தப்பட்டு பின்வரும் விபரப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

**வரி மேல்முறையீட்டு குழு**

| வ. எண் | வார்டு எண். | நகர்மன்ற உறுப்பினர் பெயர் | காலம் |
|---|---|---|---|
| 1 | 2 | திருமதி.சி.மீனா | 31.03.2022 முதல் 31.03.2024 வரை |
| 2 | 4 | திரு.து.வசந்தகுமார் | 31.03.2022 முதல் 31.03.2024 வரை |
| 3 | 10 | திரு.கா.சரண்யாதேவி | 31.03.2022 முதல் 31.03.2024 வரை |
| 4 | 13 | திருமதி.சே.இந்திரா | 31.03.2022 முதல் 31.03.2024 வரை |

**நியமன குழு**

| வ. எண் | வார்டு எண். | நகர்மன்ற உறுப்பினர் பெயர் | காலம் |
|---|---|---|---|
| 1 | 24 | திருமதி.மு. புதிமிளா | 31.03.2022 முதல் 31.03.2024 வரை |

**ஒப்பந்தக் குழு**

| வ. எண் | வார்டு எண். | நகர்மன்ற உறுப்பினர் பெயர் | காலம் |
|---|---|---|---|
| 1 | 20 | திரு. ரா. தனசேகரன் | 31.03.2022 முதல் 31.03.2024 வரை |

8) <u>கூட்டங்கள்</u>

தணிக்கை ஆண்டில் **01.04.2023** முதல் **31.03.2024** வரை திருமதி.ப.கிருஷ்ணவேணி, அவர்கள் நகராட்சி ஆணையராக பணிபுரிந்துள்ளார்.

அறிக்கை ஆண்டான **01.04.2023** முதல் **31.03.2024** வரை பின்வரும் விவரப்படி நகர்மன்ற சாதாரணக்கூட்டம் மற்றும் அவசர நிமித்தம் அவசரக்கூட்டம் கூட்டப்பட்டது. அறிக்கை ஆண்டில் கூட்டப்பட்ட கூட்டங்களின் விவரம்.

| கூட்ட விபரம் | நகராட்சி | |
|---|---|---|
| | கூட்டம் | பொருள்கள் |
| ஒப்பந்தக்குழு கூட்டம் | – | – |
| சாதாரணக்கூட்டம் | 6 | 427 |
| அவசரக்கூட்டம் | – | – |
| சிறப்புக்கூட்டம் | – | – |
| நியமனக்குழு கூட்டம் | – | – |

**<u>அறிக்கையாண்டில் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் விவரம்:</u>**

| வ. எண் | திருவாளர்கள் | பணி விபரம் | முதல் | வரை |
|---|---|---|---|---|
| 1. | திருமதி. கிருஷ்ணவேணி | ஆணையாளர் | 01.04.2023 | 31.03.2024 |
| 2. | திரு. தாண்டவமூர்த்தி | பொறியாளர்(பொ) | 01.04.2023 | 04.06.2023 |
| 3. | திரு.கே.சம்பத்குமார் | பொறியாளர் | 05.06.2023 | 31.03.2024 |
| 4 | திரு.இரா.காசிலிங்கம் | மேலாளர் | 04.12.2023 | 31.03.2024 |
| 5 | திரு. செந்தில் | பொது பணி மேற்பார்வையாளர்(பொ) | 01.04.2023 | 01.05.2023 |
| 6 | திரு.எ.யுவராஜ் | பொது பணி மேற்பார்வையாளர் | 02.05.2023 | 31.03.2024 |
| 7 | திரு.தி.நேதாஜி மோகன் | நகரமைப்பு ஆய்வர் | 02.06.2023 | 31.03.2024 |
| 8 | திரு.கே.அருண்குமார் | துப்புரவு ஆய்வாளர் | 09.06.2023 | 31.03.2024 |
| 9 | திருமதி.செ.அமுதவள்ளி நாச்சியார் | கணக்கர் | 01.04.2023 | 31.03.2024 |
| 10 | திரு.தி.கார்த்திகேயன் | உதவியாளர் | 01.04.2023 | 31.03.2024 |
| 11 | திருமதி.ஆர்.உமா மகேஸ்வரி | கணினி உதவி திட்ட அமைப்பாளர் (பொ) | 01.04.2023 | 31.03.2024 |

9) <u>முசிறி நகராட்சியில் பணிபுரியும் இதர பணியாளர்களின் விவரம்:</u>

அரசாணை எண்.**10**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.**23.01.2023** ன் படி இரண்டாம் நிலை நகராட்சிக்கென அனுமதிக்கப்பட்டுள்ள பணியிடம் மற்றும் பணிபுரிந்த அலுவலர்கள் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | பணியின் விவரம் | அனுமதித்தது | பணிபுரிதல் | காலியிடம் |
|---|---|---|---|---|
| 1 | மேலாளர் (நிலை IV) | 1 | 1 | 0 |
| 2 | கணக்கர்( நிலை V) | 1 | 1 | 0 |
| 3 | வருவாய் ஆய்வாளர் | 1 | 1 | 0 |
| 4 | உதவியாளர் | 1 | 1 | 0 |
| 5 | இளநிலை உதவியாளர் | 5 | 4 | 1 |
| 6 | பதிவறை எழுத்தர் | 1 | 1 | 0 |
| 7 | வருவாய் உதவியாளர் | 3 | 1 | 2 |
| 8 | அலுவலக உதவியாளர் | 3 | 3 | 0 |
| 9 | மின் பணியாளர் | 1 | 0 | 1 |
| 10 | மின் பணி உதவியாளர் | 1 | 1 | 0 |
| 11 | இரவு காவலர் | 1 | 1 | 0 |
| 12 | பேருந்து நிலைய ஏவலர் | 1 | 0 | 1 |
| 13 | பேருந்து நிலைய காவலர் | 1 | 0 | 1 |
| 14 | வாரசந்தை காவலர் | 1 | 1 | 0 |
| 15 | துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் | 4 | 4 | 0 |
| 16 | களப்பணி உதவியாளர் | 1 | 1 | 0 |
| 17 | ஓட்டுநர் | 1 | 1 | 0 |
| 18 | பொருந்துநர் | 1 | 1 | 0 |
| 19 | குடிநீர் பணியாளர் | 1 | 1 | 0 |
| 20 | குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி காவலர் | 2 | 1 | 1 |
| 21 | குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி இயக்குபவர் | 3 | 3 | 0 |
| 22 | தூய்மை பணியாளர் | 32 | 27 | 5 |
| | | | | |

10) **2023– 2024 வழக்குகள் மற்றும் சட்ட செலவுகள்:**

ஆண்டு இறுதியில் முடிவு பெறாத வழக்குகள் : 8

அறிக்கை ஆண்டில் வழக்கறிஞருக்கு கொடுக்கப்பட்ட தொகை : 17500

சென்ற ஆண்டு செலவிடப்பட்டதொகை : 50000

11) **பொறியாளர் பிரிவு**

முசிறி நகராட்சியில் 01.04.2023 முதல் 04.06.2023 முடிய துறையூர் நகராட்சி பொறியாளர் திரு.தாண்டவமூர்த்தி பொறியாளர்(பொ) ஆகவும், மற்றும் 01.04.2023 முதல் திரு.செந்தில் துறையூர் நகராட்சி பொறியாளர் பொதுப்பணி மேற்பார்வையாளர்(பொ) ஆகவும் பணிபுரிந்துள்ளனர். திரு.கே.சம்பத்குமார் 05.06.2023 முதல் 31.03.2024 வரை பொறியாளராகவும், திரு. எ.யுவராஜ் பொதுபணி மேற்பார்வையாளராகவும் பணிபுரிந்துள்ளார்கள்.

12) **போக்குவரத்துக்கள்: சாலைகள், பாலஙகள், கரிசல் கற்கட்டிடஙகள் சாலைகள்:**

இந்நகராட்சி வழியாகச்செல்லும் தேசிய நெடுஞ்சாலைகளும் மாநில நெடுவழிச்சாலைகளின் விவரஙகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1) மாநில நெடுஞ்சாலை – 13.185 கி.மீ
2) மாவட்ட நெடுஞ்சாலை – –

தற்பொழுது அனைத்து தார்சாலைகளும் திருப்திகரமாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

13) **நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் சாலை விவரஙகள் வருமாறு.**

| | | | |
|---|---|---|---|
| 1) | சிமிண்ட் சாலை | : | 10.680 கி.மீ |
| 2) | தார் சாலைகள் | : | 53.019 கி.மீ |
| 3) | WBM சாலைகள் | : | 0.000 கி.மீ |
| 4) | மண் சாலை | : | 0.000 கி.மீ |
| | | | 63.699 கி.மீ |

14) **குடிநீர் விநியோகம்:**

| வ. எண் | குடிநீர் மேல்நிலை தொட்டிகள் அமைந்துள்ள இடம் | கொள்ளவு (லிட்டரில்) |
|---|---|---|
| 1 | யூனியன் ஆபிஸ் | 7,00,000 |
| 2 | உழவர் சந்தை | 2,00,000 |
| 3 | கலப்பு காலனி | 2,00,000 |
| 4 | ஆலமரத்துப்பட்டி | 1,00,000 |
| 5 | வாரசந்தை | 1,00,000 |
| 6 | மேலவடுகப்பட்டி | 1,00,000 |
| 7 | வளமீட்பு பூங்கா அருகில் | 1,00,000 |
| 8 | நகராட்சி அலுவலகம் அருகில் | 90,000 |
| | **கூடுதல்** | **15,90,000** |

| | | |
|---|---|---|
| 1 | பம்பின் மெயின் நீளம் | 4.6 கி.மீ |
| 2 | குடிநீர் விநியோகம் குழாய்கள் நீளம் | 56.45 கிமீ |
| 3 | பொது குழாய்கள் எண்ணம் | 6376 |
| 4 | குடிநீர் குழாய் இணைப்புகளின் எண்ணம் | வீட்டு உபயோகம் – 5885<br>வணிகம் –100<br>தொழிற்சாலை – 1<br>கூடுதல் – 5986 |
| 5 | குடிநீர் விநியோக லாரி | ஏதும் பராமரிக்கப்படவில்லை |
| 6 | இந்தியா மார்க் (II) | 64 எண்ணம் |
| 7 | மின் பவர் பம்ப் | 95 எண்ணம் |
| 8 | குடிநீர் இணைப்பு கட்டணம் | வீட்டு உபயோகம் மாதம் ஒன்றிக்கு – ரூ.75<br>வணிகம் பயன்பாட்டிற்கு மாதம் ஒன்றிக்கு – ரூ.200 |
| 9 | குடிநீர் இணைப்பு முன் வைப்பு தொகை | வீட்டு இணைப்பு ரூ.5000<br>வணிக இணைப்பு ரூ.8000 |
| 10 | தற்போதைய நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றிக்கு குடிநீர் விநியோகம் | 91 LPCD |
| 11 | நகரின் குடிநீர் தேவை | 3.3 MLD |
| 12 | நகரின் குடிநீர் தற்போது விநியோகம் | 3.3 MLD |

15) **<u>உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் மேல்நிலைப்பள்ளிகள்</u>**

அரசினர் மேல்நிலைப்பள்ளிகள், ஆண்கள் 1 பெண்கள் –1

**<u>துவக்கப்பள்ளிகள்</u>**

ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி – திருச்சி ரோடு

ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி – வடுகப்பட்டி

ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி – நடராஜ நகர்

**<u>நடுநிலைப்பள்ளிகள்</u>**

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி – வடக்கு மடவாளர் தெரு

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி – சந்தபாளையம்

ஊராட்சி ஒன்றி துவக்கப்பள்ளிகள் மற்றும் நடுநிலைப்பள்ளிகள் தற்போது ஊராட்சி ஒன்றிய பராமரிப்பில் உள்ளது. மேற்படி பள்ளிகளை நகராட்சியின் பராமரிப்பிற்கு கொண்டு வருவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

16) <u>தனியார் பள்ளிகள் பொது நூலகங்கள்</u>

பொது நூலகங்கள் அறிக்கையாண்டில் நகராட்சியால் பராமரிக்கப்படவில்லை. ஆனால் மாவட்ட கிளை நூலகம் ஒன்று இந்நகரில் செயல்பட்டு வருகிறது.

17) <u>சந்தைக்கு மற்றும் விழாக்களுக்கு தண்ணீர் வசதி</u>

அறிக்கை ஆண்டில் உள்ளூர் முக்கியத்துவம் பெற்ற திருவிழாக்களும் வாரச்சந்தையும் வழக்கம் போல் நடைபெற்றது. தேவையான சுகாதாரப்பணிகள் செய்து முடிக்கப்பட்டது. இந்நகராட்சி பகுதிக்கு காவிரி ஆற்றினை நீர் ஆதாரமாக கொண்டு சொந்த குடிநீர் திட்டம் செயல்பாட்டில் 8 குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் ஒருநாளைக்கு சுமார் 30.32 லட்சம் லிட்டர் கொடுக்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| பொதுக்குழாய்கள் | –– | 275 |
| வீட்டுக்குழாய் இணைப்புகள் | –– | 6376 |
| வணிக வளாகங்கள் | –– | 100 |
| தொழிற்சாலை | –– | 1 |

18) <u>சாக்கடை</u>

இந்நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் ஏதும் இல்லை திறந்தவெளி கால்வாய் 52.25 கி.மீ. பராமரிக்கப்பட்டு வருகிறது.

**19)** இந்நகராட்சி எல்லைக்குள் உள்ள சாலைகள் பராமரிப்பு செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றப்பட்டு, சாலைகள் அகலப்படுத்தப்பட்டுள்ளது. நகராட்சி எல்லையில் காவேரி ஆறு செல்கிறது.

20) <u>தெருவிளக்கு வசதி:</u>

அறிக்கை ஆண்டில் பராமரிக்கப்பட்ட விளக்குகளின் மொத்த எண்ணிக்கை விவரம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | LED | | –– | 821 |
| 2. | சோடியம் – வேப்பர் விளக்கு | 250 W | –– | 0 |
| 3, | உயர்மின் கோபுர விளக்கு | 250 W | – | 10 |
| 4 | குழல் விளக்கு | | – | 1355 |
| 5. | CFL விளக்கு | | – | 183 |
| 6. | சோலார் விளக்கு | | – | 15 |
| | | மொத்தம் | – | 1865 |

**21)** <u>பொது நலம் மருத்துவ உதவி</u>

இந்நகராட்சி எல்லைக்குள் அரசு மருத்துவமனை 15 தனியார் மருத்துவ மனைகளும் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையமும் உள்ளன.

## 22) அரசு மருத்துவமனை

இந்நகராட்சியின் கீழ் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் 2004ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. ஒரு சுகாதார ஆய்வாளர் அறிக்கை ஆண்டில் பணிபுரிந்து வருகின்றார். அறிக்கை ஆண்டில் சுகாதாரத்தைப்பற்றிய பிரசுரஙகள் சுகாதார சிப்பந்திகளைக்கொண்டு விளம்பரம் செய்யப்பட்டு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பட்டது. 24 வார்டுகளில் அவ்வப்போது திடக்கழிவு மேலாண்மை தொடர்பாக கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது.

## 23) பொது சுகாதாரம்:

இந்நகராட்சியில் அறிக்கை ஆண்டில் அனுமதிக்கப்பட்ட சுகாதார ஆய்வர் பணியிடத்தில் ஒருவர் மட்டுமே பணிபுரிந்து வருகிறார். அனுமதிக்கப்பட்ட நிரந்தர துாய்மை பணியாளர்கள் 32 நபர்களில் 23 நபர்கள் ஒப்பந்த பணியாளர்கள் 75 நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இத்தலைப்பின் சம்பளம் மற்றும் இதரவகையினர் நடப்பு ஆண்டில் ரூ.174.14 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

## 24) பிறப்பு விகிதம், மற்றும் மகப்பேறு உதவி

அறிக்கையாண்டில் பிறப்பு, இறப்புகளை பதிவு செய்யும் பணியை சுகாதார ஆய்வாளர் பதவிக்குரிய முழு அதிகாரம் பெற்ற ஒரு சுகாதார ஆய்வர் பார்த்து வருகிறார். பிறப்புகள் பதிவு செய்வதில் அறிக்கை ஆண்டில் பதிவு செய்யப்பட்ட பிறப்புகள் 370 ஆகும். நகராட்சியால் அறிக்கை ஆண்டில் குழந்தைகள் காப்பகம் ஏதும் பராமரிக்கப்படவில்லை

## 25) இறப்பு விகிதம் மற்றும் தொற்று நோய்கள்:

| | | |
|---|---|---|
| 1) | அறிக்கையாண்டில் பதிவு செய்யப்பட்ட இறப்புகள் | – 229 |
| 2) | அறிக்கையாண்டில் பதிவு செய்யப்பட்ட இறந்த பிறந்தவை | – 01 |
| 3) | காலரா, அம்மைபோன்ற பல்வேறு நோய்கள் மூலம் இறப்புகள் ஏதும் இல்லை மற்ற நோய்கள் மூலம் ஏற்பட்ட மரணம் குறித்த விளக்கம் கீழ்கண்டவாறு உள்ளன. | – இல்லை |

## 26) அறிக்கை ஆண்டில் இறப்பு விகிதம்

| | | | |
|---|---|---|---|
| 1) | காலரா | –– | இல்லை |
| 2) | அம்மை | –– | இல்லை |
| 3) | பிளேக் | –– | இல்லை |
| 4) | மலேரியா | –– | இல்லை |
| 5) | சீதபேதி | –– | இல்லை |
| 6) | காய்ச்சல் | –– | இல்லை |
| 7) | பிறமூச்சுவை நோய்கள் | –– | இல்லை |
| 8) | பிறகாரணஙகளால் | –– | இல்லை |
| 9) | வெறிநாய் கடியினால் இறப்பு | –– | இல்லை |

இந்நகராட்சியில் கொசுத்தடுப்பு ஒழிப்புத்திட்டம் செயல்பட்டு வருகிறது. பொது சுகாதார இயக்குநர், முதுநிலை பூச்சியியல் வல்லுநர் அறிவுரைகளின்படி, Egg, larva, Pupaadult, Stage க்கு பூச்சிக்கொல்லி மருந்து தெளிப்பான் அபேட் பயால் லார்வி புழு என்ற மருந்து மூலம் கொசு உற்பத்தி ஒழிக்கப்பட்டு வருகிறது. பொதுவாக தண்ணீர் தேஙகி உள்ள இடஙகளில் மகளிர் சுயஉதவி குழுக்கள் மூலம் 14 டெங்கு பணியாளர்கள் மூலம் மருந்து தெளிக்கப்பட்டது. மற்றும் பைரித்திரம் கொண்டு கொசு மருந்து இயந்திரம் மூலம் புகை பரவ செய்து கொசுக்களை அழிக்கப்பட்டும் வருகிறது. கொசு வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள கைத்தெளிப்பான மூலம் பெரிய புகை மருந்து இயந்திரம் சிறிய புகை இயந்திரஙகள் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டுவருகிறது. நடப்பு ஆண்டில் 17 டெஙகு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்கள் நலம் பெற்றுள்ளார்கள்.

**<u>27) கொக்கிப்புழு திட்டம்</u>**

அறிக்கை ஆண்டில் இந்நோய் நகராட்சி பகுதியில் இல்லை

**<u>28) நோய்தடுப்புத்திட்டம்:</u>**

இந்நகராட்சி எல்லைக்குள் உள்ள குழந்தைகளுக்கு தற்காலிக வேக்சினேட்டர் மூலமாக சொட்டுமருந்து ஒவ்வொரு புதன் கிழமையும், வழஙகப்பட்டுவருகிறது. ஆண்டுதோறும் பள்ளிக்கான வளர்இளம் பெண்களுக்கு விட்டமன் மருந்து அளிக்கப்படுகிறது. இத்திட்டம் துணை இயக்குநர், பொது சுகாதாரம், அறந்தாஙகி அவர்களின் உத்திரவின்படி, நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ குழுவினால் நடத்தப்பட்டு வருகிறது.

**<u>29) குடும்ப நலத்திட்டம்</u>**

குடும்ப நலத்திட்டத்திற்கென அலுவலர் எவரும் நியமனம் செய்யப்படவில்லை

**<u>30) பொதுசுகாதாரம் துப்புரவு பாதுகாப்பு:</u>**

அறிக்கை ஆண்டில் 5 பொதுக்கழிவறைகளும், 24 சமுதாய கழிவறைகளும் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. காலை, மாலை இருமுறை தெருக்கள் கூட்டி சுத்தம் செய்யப்பட்டு குப்பைகள் நகராட்சி லாரிகள் மூலமாகவும் வேளஙகாநத்தம் ரோட்டில் உள்ள உரக்கிடஙகில் கொட்டப்பட்டு வருகிறது.

நகரில் உள்ள கழிவு நீர் கால்வாய்கள் முழுவதும் காலை ஒரு முறை சுத்தம் செய்யப்படுகிறது. மேற்படி பணிகளை ஒரு மேற்பார்வையாளர், மூலம் மேற்பார்வையில் செய்யப்படுகிறது. நகரின் சேகரிக்கப்படும் குப்பைகளை 1 டிராக்டர் 6சிறிய ரக லாரி (LCV), 10 BOV மற்றும் 20 தள்ளுவண்டிகள் மூலம் தினந்தோறும் அப்புறப்படுத்தப்படுகிறது.

**<u>31) துப்புரவு பணி</u>**

நகராட்சியில் 9812 மொத்த குடியிருப்புகள் உள்ளது. 1771 வணிக நிறுவனஙகள் உள்ளது. துப்புரவுப்பணியாளர்கள் துப்புரவு பணிகளை செவ்வேனே செய்து வருகின்றனர்.

நகராட்சியில் மலேரியா நோய் ஒழிப்புதிட்டம் கூடுதல் பணியாக செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் துப்புரவு பணியாளர்கள் மருந்து தெளிக்கும் பணியாகளை மேற்கொண்டு வருகின்றார். நுகராட்சி பகுதி ஆறு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு வாரம் ஒரு முறை கொசு லார்வா ஒழிப்பு தெளிக்கப்படுகிறது. பணியை சுகாதார ஆய்வாளரால்

கண்காணிக்கப்படுகிறது. நகரில் கொசு உற்பத்தியினைகுறைக்க தேவையான நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**<u>32) கலவை உரம்</u>**

இந்நகராட்சி வேளகாநத்தம் ரோடு சாலையில் சர்வே எண்.11/3 சுமார் 4.1 ஏக்கர் நிலப்பரப்பில் குப்பை சேகரிக்கும் இடம் அமைந்துள்ளது. கடந்த 2000–ம் வருடம் முதல் கலவை உரம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. 2018 – 2019 ஆம் நிதியாண்டில் பையோமைனிங திட்டம் 113.53 இலட்சத்தில் பணி முடிக்கப்பட்டுள்ளது.

33) **<u>உணவு கலப்பட தடைச்சட்டம்:</u>**

உணவு பாதுகாப்பு சட்டம் மாவட்ட ஆட்சியர் தலைமையின் கீழ் செயல்படுத்தப்பட்டுவருகிறது.

**34)** வாடகைக்கு ஓடும் கார்கள் தனியாரால் நடத்தப்பட்டு வருகிறது.

**35)** சந்தைகள், ஆடுவதை நிலையம், தினசரி சுஙக வசூல், கட்டண கழிவறை இருசக்கர வாகனம் நிறுத்தும் இடம் நகராட்சியால் பராமரிக்கப்படுகின்றன.

அறிக்கையாண்டிலும், அதற்கு முந்தைய ஆண்டுகளில் கிடைத்த ஆண்டு வருமானம் பின்வருமாறு.

| ஆண்டு | வார சந்தை | தினசரி சுங்க வசூல் | ஆடு அடிக்கும் தொட்டி | கட்டண கழிப்பறை | இருசக்கர வாகனம் நிறுத்தும் இடம் |
|---|---|---|---|---|---|
| 2021-2022 | 4.88 | 6.35 | 1.32 | 3.58 | 4.97 |
| 2022-2023 | 5.12 | 6.67 | 1.38 | 3.76 | 5.22 |
| 2023-2024 | 5.86 | 6.98 | 1.42 | 3.82 | 5.48 |

***<u>36) சந்தைகள்:</u>***

இந்நகர் மன்றம் தினசரி காய்கனி சந்தை பராமரிக்கப்பட்டு வருகிறது. 96 கடை கட்டப்பட்டுள்ளன. நகராட்சிக்கு சொந்தமான கடைகள் அனைத்தும் பொது ஏலம் மூலம் ஆண்டு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. மேற்படி கடைகள் மூலம் அறிக்கையாண்டில் ரூ.15.05 லட்சம் வருமானம் வரப்பெற்றது.

37) **<u>பேருந்து நிலையம்</u>**

இந்நகராட்சியில் பேரூராட்சியாக இருந்தபொழுது 1984–ம் ஆண்டில் பேருந்து நிலையம் மற்றும் கடைகள் கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு வரப்பெற்றுள்ளது. மேலும் 2001–ம் ஆண்டில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு நகராட்சி 2 பேருந்து நிலையஙகளுக்கு நாளொன்றுக்கு சராசரியாக 130 பேருந்துகள் வந்து செல்கின்றன. அறிக்கையாண்டில் பேருந்து நிலையம் பி கிரேடு நிலையில் பராமரிக்கப்பட்டுவருகிறது. மேற்படி நிதியாண்டில் பேருந்து நுழைவுக்கட்டணம் ரூ.2.78 இலட்சம் வருமானம் வரப்பெற்றுள்ளது.

**38) <u>மிதிவண்டி மற்றும் இருசக்கர வாகனம் நிறுத்தும் இடம் :</u>**

புதிய பேருந்து நிலையத்தில் இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டப்பட்டு பயன்பாட்டின் உள்ளது. அறிக்கையில் மேற்படி இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்திற்கு ஆண்டு வருவாய் ரூ.5.22 இலட்சம் வருவாய் வரப்பெற்றுள்ளது

**39) வாடகை உந்து நிலையம்.**

வாடகை உந்துநிலையம் இந்நகராட்சியில் பராமரிக்கப்படவில்லை.

**40) சாலையோர மரங்கள்**

சாலை ஓர மரஙகள், இந்நகராட்சியில் பராமரிக்கப்படுகின்றது.

**41) நகரமைப்பு பிரிவு**

அறிக்கை ஆண்டில் நகரமைப்பு பிரிவில் நகரமைப்பு ஆய்வாளர் திரு.ஜீ.கே. பால சுப்பிரமணியன் 01.04.2023 முதல் 01.06.2023 முடியவும், திரு.தி.நேதாஜி மோகன் 02.06.2023 முதல் 31.03.2024 முடிய நகரமைப்பு ஆய்வாளராக பணிபுரிந்துள்ளனர்.

இந்நகராட்சியில் நகரமைப்பு பிரிவில் சங்கிலியாளர் பணி நியமனம் செய்யப்படவில்லை

முசிறி நகராட்சிப் பகுதிக்கு ஆழ்துளை கிணறு மூலம் குடிநீர் வசதி கிடைக்கப்பெற்றுள்ளதால் வளர்ச்சிகள் பல்வேறு வகைகளில் ஏற்பட்டுள்ளது. தற்போது, ஏற்பட்டுள்ள வளர்ச்சிகள் திட்ட உத்தேசங்களுக்கு ஏற்றதாக இல்லாமல் மாறுதல் செய்ய வேண்டியுள்ளது. இந்நகராட்சியில் மேற்படி உத்தேசங்களை தயாரிக்கவும் அமுல் படுத்தவும் போதிய அலுவலர்களும் பணியாளர்களும் மாதம் மாதம் ஊதியம் வழங்க நிதிநிலையும் இல்லை. நில அளவை பதிவேடுகள் இல்லாமையால் நகரளவை சங்கிலியாளரும் நியமிக்கப்படவில்லை. மேலும், பொருளாதார நிதிக்குறைவின் காரணமாக பொதுநிதியிலிருந்து ஒரு விழுக்காடு தொகையை உள்ளூர் திட்டக்குழுமம் ஒதுக்கீடு செய்ய இயலாத நிலை உள்ளது.

42) ***சொத்துவரி கேட்பு வசூல் நிலுவை விவரம்*** (லட்சத்தில்)

| விபரம் | நிலுவை | நடப்பு | மொத்தம் |
|---|---|---|---|
| கேட்புத்தொகை | 13.73 | 152.42 | 166.15 |
| மொத்த வசூல் | 9.42 | 149.02 | 158.45 |
| நிலுவை | 4.30 | 3.39 | 7.69 |

**43) பொது வருவாய்**

சொத்துவரி 81(1)ன் படி சொத்துவரியின் கீழ் குறிப்பிட்டுள்ளவை சேர்ந்துள்ளன.
தீர்மான எண். 93 நாள்.12.09.1997

1) பொதுகாரியஙகளுக்கு – 3 %
2) குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் வசதி – 3 %
3) கழிப்பிட வசதி – 1.5 %
4) தெரு விளக்கு வசதி – 2.5 %

**மொத்தம் – 10 %**

**44) காலி நில வரி**

இந்நகராட்சியில் அரசாணை எண் 151 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 20.8.2009ல் வெளியிடப்பட்டுள்ள விதிகளின்படி, காலிமனை வரி விதிப்புகளை 01.04.2010 முதல் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.41802/2009/ஆர்1 நாள். 7.9.2009 தெரிவித்துள்ளவாறு நகர்மன்ற தீர்மான எண் .1115 நாள்.30.10.2009ன்படி சதுரடிக்கான தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு காலிமனை வரிவதிப்பு செய்யப்பட்டு வருகிறது.

| மண்டலங்கள் | தற்போதைய மண்டல மதிப்பு |
|---|---|
| A | 0.10 |
| B | 0.15 |
| C | 0.20 |

**45) 01.10.2018 (இரண்டாம் அரையாண்டு) முதல் தொழில்வரி உயர்வு செய்யப்படுவது குறித்த அறிவிக்கை**

1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (திருத்தப்படி 59/1998 பிரிவு 124D உட்பிரிவு (13)ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை கொண்டும், தமிழ்நாடு தொழில் வரி சட்டம் 1999 விதி 16 (1)ன்படியும், கீழ்கண்ட விபரப்படி தொழிவரி நிர்ணயம் செய்து இறுதியாக ஊர்ஜிதமாக நிர்ணயித்து இதன் மூலம் அறிவிக்கப்பட்டது.

| வ. எண் | சராசரி அரையாண்டு வருமானம் | 01.10.2014 முதல் திருத்தம் செய்யப்பட்ட அரையாண்டு தொழில் வரி (ரூ) | 01.10.2018க்கு பின் நிர்ணயம் செய்யப்படும் அரையாண்டு தொழில் வரி (ரூ) |
|---|---|---|---|
| 1 | ரூ.21,000/– வரை பெறுவோர் | இல்லை | இல்லை |
| 2 | ரூ.21,001/– முதல் 30,000/– வரை | 135 | 185 |
| 3 | ரூ.30,001/– முதல் 45,000/– வரை | 340 | 425 |
| 4 | ரூ.45,001/– முதல் 60,000/– வரை | 635 | 930 |
| 5 | ரூ.60,001/– முதல் 75,000/– வரை | 970 | 1200 |
| 6 | ரூ.75,001/– முதல் அதற்கு மேல் | 1250 | 1250 |

**46) தொழில்வரி கேட்பு வசூல் நிலுவை விவரம்**

(ரூபாய் லட்சத்தில் )

| விபரம் | நிலுவை | நடப்பு | மொத்தம் |
|---|---|---|---|
| கேட்புத்தொகை | 0.93 | 29.64 | 30.57 |
| மொத்த வசூல் | 0.79 | 29.30 | 30.10 |
| நிலுவை | 0.13 | 0.33 | 0.47 |

**47) கணினி**

முசிறி நகராட்சியில் முக்கியமான கணக்கு வழக்குகள் சம்மந்தமான அறிக்கைகளை கணினி பொறி மூலம் செயல்படுத்திட உதவி திட்ட அமைப்பாளர் (Assistant Programmer) பணியிடம் இல்லாத சூழ்நிலையில் திருச்செங்கோடு நகராட்சி கணினி உதவி திட்ட அமைப்பாளர் திருமதி. உமா மகேஸ்வரி கூடுதல் பொறுப்பு வகித்து வருகிறார்.

**48) இணையதளம் – இ–மெயில்**

முசிறி நகராட்சியில் தனியாக ஒரு இணையதள வசதியும் செய்யப்பட்டுள்ளது. http://www.tnurbantree.tn.gov.in / Musiri

இ – மெயில் – முகவரி : commr.musiri@tn.gov.in

**தொலைபேசி எண். 9150375620**

**<u>49) கடன் தொகை செலுத்தியது</u>**

அரசுக்கு செலுத்த வேண்டிய கடன் – அசல் – 3170640
வட்டி – 1500000

**<u>50) தணிக்கை:</u>**

| | |
|---|---|
| அறிக்கை ஆண்டில் தொடக்கத்தில் இருந்து தணிக்கைத்தடைகள் | –– 157 |
| அறிக்கையாண்டில் வரப்பெற்றது மொத்தம் | –– – |
| அறிக்கை ஆண்டில் முடிவு பெற்றவை | –– – |
| அறிக்கையாண்டில் இறுதி நிலுவை | –– 157 |

தணிக்கைத்தடை நிலுவையில் உள்ளதை நிவர்த்தி செய்ய துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

**51) பொதுவான திட்டங்கள்**

முசிறி நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாக 15.12.2021ந் தேதி முதல் தரம் உயர்த்தப்பட்டது. எனவே, முசிறி நகராட்சியில் கீழ்காணும் விவரப்படி திட்டப்பணிகள் 2023–24 ஆம் ஆண்டு நடைபெற்றுள்ளது.

1. நகர்புற சாலை மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.146.00 இலட்சத்தில் பழுதடைந்த தார் சாலைகள் சீரமைக்கப்பட்டுள்ளது.
2. மாநில நிதிக்குழு மான்யத்திட்டத்தின் கீழ் ரூ.155.00 இலட்சத்தில் பழுதடைந்த தார் சாலைகள் சீரமைக்கப்பட்டுள்ளது.
3. DORMANT திட்டத்தின் கீழ் ரூ.30.00 இலட்சத்தில் மண் சாலைகளை தார் சாலைகளாக மாற்றப்பட்டுள்ளது.
4. கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.139.00 இலட்சத்தில் அறிவுசார் மையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.
5. மாநில நிதிக்குழு மான்யம் (இயக்கம் மற்றும் பராமரிப்பு) திட்டத்தின் கீழ் ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் அரசு பள்ளிகள் புணரமைக்கும் பணிகள் நடைபெற்றுள்ளது.

## <u>முடிவுரை</u>

இந்நகர மக்களின் அடிப்படை தேவைகளான குடிநீர் வசதி, பொது சுகாதார வசதி மற்றும் தெரு விளக்கு வசதிகள் அனைத்தையும் தொய்வில்லாமல் வழஙகி நகராட்சி நிதி நிலையினைக் கருத்தில் கொண்டு பொது மக்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றும் வகையில் இந்நகராட்சியில் அனுப்பப்படும் கருத்துரைகளை ஏற்று அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டது. இதுபோல் இந்நகராட்சியின் முன்னேற்றத்திற்கு பல்வேறு திட்டப்பணிகளை முழுமையாகவும் துரிதமாகவும் செயல்படுத்த முழு ஒத்துழைப்பும் ஆதரவும் அளித்த அனைத்து உள்/வெளி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரையும் பாராட்டி நன்றி கூறி இவ்வறிக்கையினை முடிக்கிறேன்.

**ஆணையாளர்**
**முசிறி நகராட்சி.**